**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# Women in Internal Affairs during the Sangam Period

**V. Bavani,** Research Scholar, Madras Christian College, Chennai-600059, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-2825-0822
DOI: 10.5281/zenodo.14752240

## Abstract

*Puram life at the Sangam times can be the economic activity and Agam life can be said to be the family activity that prepares the individual. In Sangam literature, material production activities such as hunting, ploughing, fishing and war have taken place. People involved in these jobs. They make love, raise families, keep chastity and carry out social activities. In these two types of activities, Agam and Puram, both men and women are important in every place. However, the social contribution of both is equally important. Sangam literature is largely an internal literature. All kinds of internal activities are explained through their external activities. It is difficult to accurately divide and classify human life as internal life or external life. Similarly, in Sangam poems, there are poems in which internal and external activities are revealed in the same poem. Tamil people lived in a life affiliated with nature and have realized the internal and external walks of life. This paper finds out the internal affairs of women at the time of Sangam period.*

**Keywords:** Agam, Puram, Feast, Butter Milk, Salt Selling.

## References

[1] Parimanam, A. M. *Sanga Ilakkiyam*. New Century Book House, Chennai. 2004.
[2] Mathaiyan, P. *Agathinai Kotpaadum Sanga Aga Kavithai Marapum*. Pavai Publications, Chennai, 2009.
[3] Ammankili Murugadhas. *Sanga Kavithaiyakkam Marapum Matramum*. Kumaram Puthaga Illam, Chennai, 2006.
[4] Thaninayaga Adigal. *Nila Amaippum Tamil Kavithaiyum.* New Century Book House, Chennai. 2014.
[5] Kailasabathi, K. *Tamil Veeranilai Kavithaiyum*. Kumaram Puthaga Illam, Chennai, 2006.
[6] Amirtha Gowri, A. *Sanga Illakiyathil Uraiyaadal*. Paari Nilaiyam, Chennai,1989.
[7] Sarala Rajagopalan. *Sanga Illakiyathil Thozhi. A*alaigal Achagam, Chennai,1988.
[8] Kalaimani, K. *Sanga Illakiyathil Manitha Urimaigal. N*ila Sooriyan Pathippagam, Chennai, 2016.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# சங்க கால அகப்புற நடவடிக்கைகளில் பெண்கள்

**வே. பவானி,** முனைவர்பட்ட ஆய்வாளர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை-600059, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-2825-0822
DOI: 10.5281/zenodo.14752240

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியத்தில் அக வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றுள்ளது போன்று புற வாழ்க்கையிலும் பெண்கள் இடம் பெற்றுள்ளனர். குறிப்பாக அகப்பாடல்களில் இடம்பெறும் புறம் சார்ந்த நிகழ்வுகள் இங்குத் தொகுக்கப்பட்டுள்ளன. தினைப்புனம் காத்தல், விருந்து அயர்தல், தலைவன் இல்லாத பொழுது இல்லறக் கடன்களை ஆற்றியிருத்தல், உப்பு விற்றல், மோர் விற்றல், மீன் காய வைத்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளான புற நிகழ்வுகள் தலைவியின் அக நிகழ்வுகளினூடே இடம் பெற்றுள்ளது இவ்வாய்வின் வழி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** அகம், புறம், விருந்து அயர்தல், மோர் விற்றல், உப்பு விற்றல்.

**முன்னுரை**

புறம் என்பது பொருளாதார நடவடிக்கை என்றும் அகம் என்பது அந்த பொருளாதார நடவடிக்கைக்கு மனம் மற்றும் உடலைத் தயார் செய்யும் குடும்ப நடவடிக்கை என்றும் கூறலாம். சங்க இலக்கியத்தில் வேட்டை, உழவு, மீன்பிடித்தல், போர் போன்ற பொருள் உற்பத்தி செயல்பாடுகள் நடைபெற்றுள்ளன. இந்தப் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் மக்கள் களவில் காதல் செய்து கற்பில் குடும்பம் நடத்தி, சமூக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அகம் புறம் ஆகிய இவ்விருவகை நடவடிக்கைகளிலும் ஆண்பெண் இருபாலரும் ஒவ்வொரு இடங்களில் ஒவ்வொரு பாலினர் முக்கியத்துவம் பெறுகின்றனர். ஆயினும் இருவர் சமூக பங்களிப்பும் சம அளவில் முக்கியத்துவம் பெறுகின்றது.

சங்க இலக்கியங்கள் பெரிதும் அகப்புற இலக்கியங்களாக அமைந்துள்ளன. எல்லாவித அகச் செயல்பாடுகளும் அவர்களது புறச் செயல்பாடுகளினூடே விளக்கப்பட்டுள்ளன. மனிதர்களின் வாழ்க்கையை அக வாழ்க்கை என்றோ புற வாழ்க்கை என்றோ துல்லியமாக பிரித்து வகை செய்தல் கடினம். இதேபோல் சங்கப்பாடல்களிலும் ஒரே பாடலில் அக மற்றும் புற நடவடிக்கைகள் தெளிவாக வெளிப்படும் விதத்தில் பாடல்கள் உள்ளன. பெரும்பான்மையான அகப்பாடல்கள் புறநிகழ்ச்சிகளோடு சேர்த்தே பாடப்பட்டுள்ளன. அவ்வகைப பாடல்களில் பெண்கள் அகத்திலும் புறத்திலும் எவ்வாறு பங்கெடுத்துள்ளனர் என்பது **சங்ககால அகப்புற நடவடிக்கைகளில் பெண்கள்** என்னும் தலைப்பின் கீழ் இக்கட்டுரை ஆராய்கிறது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**அகப் புற உருவாக்கம்**

ஆதிகால மனிதன் விலங்குகளைப் போல் கிடைத்ததை உண்டு வந்தான். விலங்குகளைப் போல புனர் உற்பத்தியிலும் ஈடுபட்டு வந்தான். அவனது பொருளாதார செயல்பாடுகள் வளர உணவு சேகரித்தலோடு உற்பத்தியையும் தொடங்கினான். இச்செயல்பாடுகள் அவனது மன வளர்ச்சிக்கு உந்து சக்திகளாக அமைந்தன. அவன் சமூகமாக வாழ தொடங்கியதும் காதல் என்னும் அக உணர்வு உருவானது. சமூக வளர்ச்சிக்கு ஏற்ப உணர்வு நிலையிலும் முதிர்ச்சி ஏற்பட்டது. காதல் உணர்வுடன் பண்பாட்டு முன்னேற்றமும் ஏற்பட்டது. மனிதனின் வளர்ச்சி கட்டத்தில் மொழி உருவாக்கத்தின் நீண்ட நெடும் பயணத்தின் ஒரு கட்டத்தில் இலக்கியங்கள் உருவாயின. அவற்றுள் அவனது இன்றியமையாத அகப்புற செயல்பாடுகள் முக்கியத்துவம் பெற்றன. இந்நடவடிக்கைகளின் தொடக்ககால இலக்கிய ஆவணங்களாக சங்க இலக்கியங்கள் உள்ளன. சமூக வரலாற்றின் ஒரு கட்டத்தில் உற்பத்தியில் ஆண் பெண் இருவரும் இணைந்து கூட்டாகச் செயல்பட்டனர். பின்னர் அந்நிலை மாற்றம் அடைந்தது. இதனால் ஆண்கள் நேரடியான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பெண்கள் அவ்வுற்பத்திக்குத் துணையான வேலைகளில் ஈடுபட்டனர். இந்த சமூக உண்மைகள் இலக்கியங்கள் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அந்த இலக்கியங்களைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் விளைந்தவை அகம், புறம் போன்ற பாகுபாடுகளாகும்.

**தினைப் புனம் காத்தல்**

தினைப்புனம் காத்தல் என்பது சங்க சமூகத்தில் குறிப்பிட்ட அந்தஸ்தில் உள்ள தலைவி தம் குடும்பத்துக்குச் சொந்தமான தினை விளைந்த நிலத்தில் அதன் கதிர்களைத் தின்ன வரும் பறவைகளை விரட்டுதல் ஆகும். இந்த வேலையைச் செய்ய வரும் தலைவியை, சங்க சமூகத்தில் குறிப்பிட்ட அந்தஸ்தில் உள்ள தலைவன் கண்டு காதல் கொண்டு இருவரும் இன்புறுகின்றனர். இவ்விடத்தில் தலைவியின் காதல் ஒழுக்கமும் பொருளாதாரச் செயல்பாடும் ஒருங்கே பாடல்களில் வெளிப்படுகின்றன. ஒன்றுக்கு ஒன்று துணை நிற்பதையும் காணமுடிகிறது.

குறிஞ்சி நிலத் தலைவிக்கு உரியதாக இந்த வேலை சுட்டப்பட்டுள்ளது. தலைவி தினைப்புனம் காக்கும் காட்சி பின்வருமாறு சுட்டப்பட்டுள்ளது.

**மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சி,**
**பொலிந்த ஆயமொடு காணதக இயலி**
**தழலை வாங்கியும், தட்டை ஓப்பியும்**
**அழல்ஏர் செயலை அம்தழை அசைஇயும்,**
**குறமகள் காக்கும் ஏனல்**
**புறமும் தருதியோ? வாழிய, மழையே (அகம்., 188. 9-14)**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இப்பாடலில் தலைவனிடம் தலைவியை வரைந்து கொள்ளுமாறு வேண்டுகிறாள் தலைவி. நிலத்தில் மழை பொழிந்து நிலம் சிறப்பது போல் தலைவனும் தலைவியை மணம் செய்து கொண்டு அவர்களது இல்லற வாழ்க்கை செழிக்க வேண்டும் என்று குறிப்பாக உணர்த்துகிறாள். இந்த அக நடவடிக்கையைச் சுட்டும் போது தலைவி தினைப்புனம் காக்கும் போது, தழலைச் சுற்றியும், தட்டை அடித்து ஒலி எழுப்பியும் பறவைகளை விரட்டும் புறச் செயல்பாடும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் பல பாடல்களில் தலைவியின் அகச் செயல்பாடான இயற்கைப் புணர்ச்சியும் புறச் செயல்பாடான தினைப் புனம் காத்தலும் விளக்கப்பட்டுள்ளன.

**யாஅம் கொன்ற மரம் சுட்ட இயவில்**
**கரும்பு மருள் முதல பைந்தாட் செந்தினை (குறுந்., 198. 1-2)**

என்ற பாடலில் காவல் காக்க வரும் தலைவியைக் காண வரும் தலைவனைத் தோழி இங்கு வர வேண்டாம். தாய் இங்கு வரக்கூடும் என்று கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல். இப்பாடலுக்குப் பின்வருமாறு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

**தோழி தலைவனிடம் தன் மலைக்குரியன பூசி வருக என்றும், இயல்பாகவே மணம் உடைமையால் பூசாது வருக என்றும் கூறினாள். தலைவி அவனைப் புணர்ந்த வழி, அவன் பூசிய சந்தன மணம், தலைவியின் உடலில் காணப்பட்ட வழி, தாய் அப்புதுமணம் கண்டு ஐயுற்று, தினை கடியப் போகவிடாள் என்றும், ஆண்டு நிகழ்வது காண வருவாள் என்றும், இதனால் தாம் அஞ்சுதும் என்றும் தலைவற்குக் கூறி குறியிடம் வேறாக உரைத்தாள். (பரிமணம், அ. ப. 457)**

எனக் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் குறுவர்கள் காட்டை எரித்து வேளாண் செய்த இடத்தில் விளைவிக்கப்பட்ட பயிரின் கதிரைக் காக்கும் பொருட்டு வரும் தலைவியைக் காண வரும் காதலனுக்குத் தோழி குறி இடம் சுட்டுவதைக் காட்டுகிறது இப்பாடல். இதில் தலைவியின் தினைப் புனம் காக்கும் புற நிகழ்வும், தலைவியின் தமர் தினைப் புனைத்தை உருவாக்கிய விதமும், அவ்விடத்தில் நிகழும் தலைமக்களின் காதல் நாடகமும் சுட்டப்பட்டுள்ளன. மற்றொரு பாடலில் காவல் புரியும் தலைவிக்குக் காதல் வந்த செய்தி அறியாமல் அவளுக்கு வெறியாட்டு நிகழ்த்துவது பற்றி தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

**மரம்கொல் கானவன் புனம்துளர்ந்து வித்திய**
**பிறங்கு குரல் இறடி காக்கும், புறம் தாழ்**
**அம் சில் ஓதி, அசை இயல், கொடிச்சி (குறுந்., 214. 1 – 3)**

என்ற பாடல் வரிகளால் தினைப்புனத்தைக் காவல் காக்கும் கொடிச்சியின் நோய்க்குக் காரணம் தலைவன் பால் அவள் கொண்ட அன்பு. இதனை அறியாத இவ்வூரார் அவளுக்கு வெறியாட்டு நிகழ்த்துகின்றனர். இதனால் எந்தப் பலனும் விளையப் போவதில்லை என்று விளக்குகின்றாள் தோழி. தலைவிக்கு ஏதோ தீங்கு நேர்ந்துவிட்டது என்று கருதி அதை அறிய வெறியாட்டு

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

நிகழ்த்துதல் அக்காலப் பண்பாடாகும். ஆனால் அதன் அடிப்படைக் காரணம் தெரியாமல் இது நிகழ்த்தப்படுகிறது என்று தோழி கவலை அடைகிறாள்.

வெறியாட்டு என்னும் இப்புற நிகழ்வும், தலைவி தினைப்புனம் காத்தல் என்ற புற நிகழ்வும் தலைவி காதல் நோயுற்று துன்புறுகிறாள் என்ற அக நிகழ்வுடன் பொருத்தமாகக் கையாளப்பட்டுள்ளன. பெண்கள் விதைகள் நடுவதற்கும் காவலுக்கும் பயன்படுத்திய கருவி குறித்துப் பின்வரும் கூற்று விளக்குகிறது.

**விதைகள் நடுவதற்குப் பெண்கள் பயன்படுத்திய 'தோண்டுகழி' மிக முக்கிய கருவியாகும். இதனைத் தினைப்புனக் காவலிலும் பெண்கள் பயன்படுத்தினர் இவர்கள் பயன்படுத்திய இக்கருவி பின்னாளில் தாய்த்தெய்வங்களின் சூலாயுதமாக படிமலர்ச்சி பெற்றது.(பக்தவத்சல பாரதி, ப. 92)**

இங்ஙனம் தலைமக்களின் அக வாழ்வின் மூலமாக பல புற செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன. தலைமக்களின் களவு வாழ்வை விளக்கத் தினை புனம் காத்தலை ஒரு உத்தியாகவும் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். அகப் பொருளின் இலக்கிய இன்பத்தை மிகுவிக்கப் பயன்படுத்திய உத்தி என்றாலும், இலக்கியம் வாழ்வின் பிரதிபலிப்பு என்னும் வகையில் இச்செய்திகள் மூலம் அக்கால விவசாயம் குறித்து அறியமுடிகிறது. இவ்வாறு பல பாடல்கள் மூலம் தினைப்புன விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பு அதிகம் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

**கால்நடை வளர்ப்பில் பெண்**

கால்நடை வளர்ப்பில் பெண்கள் பல பணிகளைச் செய்துள்ளனர். பால் கறத்தல், கால்நடைகளை மேய்த்தல், கன்றுகளைப் பிடித்து கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொண்டுள்ளனர். முல்லைக்கலி பாடல்களில் ஆயர்குல தலைவியின் காதல் வாழ்க்கைக் குறித்துக் கூறும் பொழுது அவர்தம் பொருளாதார நடவடிக்கைகள் சுட்டப்பட்டுள்ளன.

தலைவியிடம் காதல் கொண்ட தலைவன் என் நெஞ்சு உன்னிடம் உள்ளது. அதை அடிமையாகக் கொண்டு சென்றவள் நீ என்று கூற, அதற்குப் பதில் கூறும் பொழுது தலைவி தான் செய்யும் வேலைகளை பட்டியலிட்டு இந்த வேலைகளை எல்லாம் நான் அடிமையாகக் கொண்டு சென்ற உன் நெஞ்சு செய்யுமோ என்று அவனை எள்ளி நகையாடுவதாக அமைந்துள்ளது பின்வரும் முல்லைக்கலி பாடல்.

**நின்நெஞ்சம் களமாக் கொண்டு யாம் ஆள, எமக்கு எவன் எளிதாகும்**
**புனத்துளான் என்னைக்குப் புகாஉய்த்துக் கொடுப்பதோ?**
**இனத்துளான் எந்தைக்குக் கலத் தொடு செல்வதோ?**
**தீணைக் காலுள் யாய் விட்ட கன்று மேய்க்கற்பதோ? (கலித்., 108. 30 – 33)**

எனக் கூறுகிறாள் தலைவி. தனது காதலைத் தெரிவிக்கும் தலைவனிடம் உன் நெஞ்சை நான் எப்படி அடிமையாகக் கொண்டு போக முடியும். உன் நெஞ்சு புனத்தில் இருக்கும் என் தமையனுக்கு உணவு எடுத்துச் செல்லுமோ? என் தந்தை பால் கறக்க கலம் கொண்டு தருமோ?

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தினை அரிந்த வயல்களில் என் தாய் மேயவிட்ட கன்றுகளை மேய்க்குமோ? என்றெல்லாம் கூறுகிறாள். இந்த வேலைகளை எல்லாம் செய்யும் தலைவியைத் தலைவன் காதலிக்கிறான். ஒரு கட்டத்தில் அவள் அவனது காதலை ஏற்கிறாள். இங்ஙனம் தலைமக்களின் காதல் வாழ்க்கையும் பொருளாதார வாழக்கையும் இப்பாடலில் ஒருங்கே விளக்கம் பெறுவதைக் காணமுடிகிறது.

**குடும்பத்தில் மகளிர்**

விருந்தோம்பல் என்பது சங்ககால மக்களின் இணையற்ற பண்பாகும். மக்கள் தம் பயணங்களின் போது ஆங்காங்கே கிடைக்கும் இடங்களில் தங்கிச் சென்று வந்துள்ளனர். அவர்களுக்கு உணவளித்தல் தங்கள் கடமை என்று அக்கால மக்கள் கருதியுள்ளனர். புலவர்களுக்கும் இரவலர்களுக்கும் உணவளித்து பாதுகாத்தல் என்பது பல பாடல்களில் சுட்டப்பட்டுள்ளன. பெண்கள் அக நடவடிக்கயானாலும் புற நடவடிக்கையானாலும் குடும்பம் சார்ந்து இயங்கினர். விருந்தோம்பல் இல்லற கடன்களில் முதன்மைக் கடனாகும். இவ் விருந்தோம்பல் கணவன் மனைவி இருவரும் இருந்து செய்தல் சிறப்பெனக் கருதப்பட்டது. இதனை,

**பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்**
**விருந்து நனி பெறுதலும் உரியள் மாதோ (ஐங்., 442. 1 – 2)**

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன. தலைவன் பாசறையில் இருக்கிறான். தன் தலைவியின் நினைவு வருகிறது. அரசன் சீக்கிரம் வினை முடித்தால் நாம் விரைவில் நம் தலைவியிடம் செல்லலாம். அவளும் விருந்தினை செய்யும் மகிழ்ச்சியைப் பெறுவாள் என்று கூறுகிறான். இங்ஙனம் விருந்து கொடுக்க இயலாது வருந்துதல் என்ற அக நிகழ்வும், தலைவன் பாசறையில் இருந்து போர் செய்தல் என்ற புற நிகழ்வும் இங்கு சுட்டப்பட்டுள்ளது.

**மோர் விற்றல்**

மோர் கடைதல் மற்றும் விற்றல் என்பது ஆயர் மகளிருக்கு மட்டும் உரியதான வேலையாகும். முல்லை நிலத்தில் கால்நடைகள் மிகுதியாக வளர்க்கப்பட்டமையால், அங்கு உபரி பால் கிடைக்கப் பெற்றது. உபரியான பாலில் உறையிட்டு தயிராக்கி, மோர் கடைந்து விற்றுள்ளனர். மோர் விற்க சென்ற தலைவியைக் கண்டு தலைவன் காதல் கொள்கிறான். இவர் மோர் விற்கும் அழகைப் பின்வருமாறு கூறுகிறான் தலைவன்

**கார்ஆரப் பெய்த கடிகொள் வியன்புலத்துப்**
**பேராத சென்று, பெரும் பதவப்புல் மாந்தி**
**நீர்ஆர் நிழல குடம் சுட்டு இனத்துள்ளும்**
**போர் ஆரா ஏற்றின், பொரு நாகு, இளம்பாண்டில்**
**தேர் ஊர, செம்மாந்தது போல், மதைஇனள்**
**பேர் ஊரும் சிற்றூரும் கௌவை எடுப்பவள் போல்**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**மோரோடு வந்தாள் – தகை கண்டை; யாரோடும்**

**சொல்லியாள் அன்றே வனப்பு (கலித்., 109. 1 – 8)**

என்ற பாடல் வரிகளில் மோர் விற்கப் போகும் தலைவியைக் கண்டு தலைவன் தன் நெஞ்சோடு கூறுவதாக அமைந்துள்ளது. இதில் தலைவியின் அழகு தலைவனுக்கு செய்த நோய் சுட்டப்பட்டுள்ளது. இங்ஙனம் தலை மக்களின் காதல் வாழ்க்கையில் மோர் விற்றல் என்ற புற வாழ்வும் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணமுடிகிறது.

**உப்பு விற்றல்**

உமணர்கள் உப்பு விற்கச் செல்லும் போது தங்கள் குடும்பத்துடன் செல்வது வழக்கம். உப்பு வணிகரின் வண்டிகளின் பூண் நடுகல்லை சிதைக்கும் என்றும், ஊர் தோறும் உப்பு விற்க செல்லும் உமணர்கள் பாலை நிலத்தில் தங்கி அடுப்பு மூட்டி உணவு சமைத்து உண்டுவிட்டு சென்றுவிட, அந்த அடுப்பில் மறவர் இறைச்சி சமைத்து உண்ணும் நிகழ்ச்சியை அகநானூறு கூறுகிறது.

மீன்பிடித்து சிறிய குடிசையில் வாழும் பரதவ மக்கள் உப்பங்கழிகளில் உழாமல் உப்பினை விளைவித்து அவற்றை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு கையில் சாற்றுக் கோலைக் கொண்டு எருதுகளை ஓட்டிச் செல்கின்றனர். இந்நிகழ்வை அகநானூற்றில் காணமுடிகிறது. ஆணும் பெண்ணும் தம் பிள்ளைகளுடன் குடும்பமாக இணைந்து தொழில் செய்துள்ளதை அறியமுடிகிறது. உப்பு விற்கும் தலைவியைக் கண்ட தலைவன் அவள் பால் காதல் கொண்டு தவிக்கும் நிகழ்ச்சி அகநானூற்றில் சுட்டப்பட்டுள்ளது.

**சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி**
**'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' எனச்**
**சேரி விலைமாறு கூறலின், மனைய**
**விளியறி ஞமலி குரைப்ப, வெரீஇய**
**மதர்கயல் மலைப்பின் அன்னகண் எனக்கு,**
**இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்**
**மாமூ தள்ளல் அழுந்திய சாகாட்டு**
**எவ்வந் தீர வாங்குந் தந்தை**
**கைபூண் பகட்டின் வருந்தி**
**வெய்ய உயிர்க்கும் நோயா கின்றே. (அகம்., 140. 6 – 15)**

என உமணர் மகள் தன் கைகளில் வளைகள் ஒலிக்க கைகளை வீசிச் சென்று நெல்லுக்கு இணையான உப்பு தருவதாக கூவிக் கொண்டு போவாள். அவள் குரலைக் கேட்டு புதிய ஆள் என்பதை உணர்ந்த நாய் குரைக்க, அதைக் கேட்டு அப்பெண் அச்சமுறுகிறாள். அத்தகைய அவளது கண்கள் எனக்கு வண்டியை இழுக்க முடியாமல் இழுக்கும் எருது அடைந்த துன்பதைத் தருகின்றன எனக் கூறுகிறான் தலைவன்.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

உப்பு விற்ற தலைவியினால் தலைவன் காதல் நோய்க்கு ஆளாகி துன்பம் அடைவது சுட்டப்பட்டுள்ளது. இங்ஙனம் தலைவியின் உப்பு விற்கும் புற நிகழ்வோடு தலைமக்களின் காதல் நிகழ்வும் சுட்டப்பட்டுள்ளது.

**மீன் காயவைத்தல்**

நெய்தல் நிலத்தில் பெண்களின் முக்கியத் தொழில் மீன் காய வைத்தல் ஆகும். நெய்தல் நிலத் தலைவி ஒருத்தியைக் கண்டு காதல் கொண்ட தலைவன் அவளது தோழியை அணுக, அவள் அவனை மறுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல்.

**நிணச் சுறா அறுத்த உணக்கல் வேண்டி**

**இனப் புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ**

**புலவு நாறுதும் செல நின்றீமோ (நற்., 45. 6 – 8)**

என்ற பாடல் வரிகளில் தலைவியாகிய இவள் மீன் பிடித்து வாழும் பரதவருடைய மகள். நீயோ தேரை உடைய செல்வ செழிப்பு மிக்க குடும்பத்து மகன். நம் இருவர் குடும்பத்துக்கும் தங்கள் காதல் ஒத்துவராது. நாங்கள் எங்கள் குடும்பத்தார் பிடித்து வந்த சுறா மீனை அறுத்து காய வைத்துக் காவல் காக்கும் தன்மை கொண்டோர். எங்கள் மேல் புலவு நாறும். நீங்கள் செல்க என்று கூறுகிறாள் தோழி. தோழி வழியாகக் கூறப்பட்டாலும் இப்பாடலில் சொல்லப்பட்டது தலைமக்களின் காதல் வாழ்க்கையே ஆகும்.

தலைவி சுறாமீனைக் காய வைக்கும் வேலை செய்பவள் என்பதையும், அவளைக் காதலிக்கும் செல்வத்தில் உயர்ந்த தலைவனையும் இப்பாடல் சுட்டுகிறது. இங்குத் தலைவனின் காதல் மறுக்கப்படுகிறது. இங்ஙனம் தலைவியின் பொருளாதார நடவடிக்கை மற்றும் அவளது சிறுகுடி வாழ்வு தலை மக்களின் காதல் வாழ்க்கைக்குத் தடையாக இருப்பதைக் காணமுடிகிறது. தலைமக்களின் காதல் உணர்வைத் தீர்மானிக்கும் காரணிகளில் பொருளாதார நிலை முக்கியமாக இருந்துள்ளதை மேற்கண்ட நெய்தற் பாடல் சுட்டுகின்றனது.

**முடிவுரை**

அகமும் புறமும் பிரிக்க முடியாதவை. புறப்பாடல்களில் அக நிகழ்வுகளைக் கூறுதல் தமிழ் மரபில் இல்லை. ஆனால் அகப் பாடல்களில் ஏராளமான புற நிகழ்வுகள் சுட்டப்பட்டுள்ளன. பெண்களைப் பொறுத்தவரை நேரடியாகப் போர்களில் பங்கெடுத்துக் கொண்ட குறிப்புகள் இல்லை எனினும், போருக்குச் சென்ற தலைவனின் குடும்பம் உட்பட, குடும்பம் என்ற அளவில் உள்ள எல்லா பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். இதனைச் சங்க அகப்பாடல் பல விளக்குகின்றன. அதிகமாக களவு வாழ்க்கையில் பெண்களின் பொருளாதார நடவடிக்கைகள் சுட்டப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. களவு வாழ்க்கை என்பது வீட்டுக்கு வெளியே நடைபெறக்கூடியது. அது பெண்கள் வெளியில் வேலை செய்யப் போகும் போது அதற்கான சூழல் உருவாகிறது. எல்லா அகப்பாடல்களிலும் தலைவி நேரடியாகப் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடாவிட்டாலும் ஏதேனும் ஒரு புற

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

நிகழ்வு பின்னணியாகவேனும் வைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இதன் மூலம் சங்க காலத்தில் பெண்கள் ஆண்களைப் போன்றே அகப்புற நடவடிக்கைகளில் ஈடுபட்டு சமூகத்திற்குத் தங்களது பங்களிப்பை வழங்கியுள்ளமை சங்கப்பாடல்கள் வழி புலனாகிறது.

**துணைநூற் பட்டியல்**

[1] பரிமணம் அ. மா (ப. ஆ), சங்க இலக்கியம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[2] மாதையன், பெ. *அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்.* பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2009.

[3] அம்மன்கிளி முருகதாஸ். *சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும்.* குமரன் புத்தக இல்லாம், சென்னை, 2006.

[4] தனிநாயக அடிகள். *நில அமைப்பும் தமிழ்க் கவிதையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.

[5] கைலாசபதி, க. *தமிழ் வீரநிலைக் கவிதை.* குமரன் புத்தக இல்லம், சென்னை, 2006.

[6] அமிர்த கௌரி, ஆ, *சங்க இலக்கியத்தில் உரையாடல்.* பாரி நிலையம், சென்னை, 1989.

[7] சரளா ராசகோபாலன். *சங்க இலக்கியத்தில் தோழி.* அலைகள் அச்சகம், சென்னை, 1988.

[8] கலைமணி, கா. *சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்.* நிலாசூரியன் பதிப்பகம், சென்னை, 2016.

[9] சண்முகம் பிள்ளை, மு. *சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1996.

[10] ஜெப மனோபன், பொ. *செம்மொழியை உருவாக்கிய சமூக அமைப்பு.* (முனைவர்பட்ட ஆய்வேடு) சென்னை பல்கலைக் கழகம், 2014.

[11] கிறிஸ்டோபர் காட்வெல். *கானலும் உண்மையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.